கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 16
சித்திரை 29 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

## வட இத்தாலியின் பேர்காமோ கிராமம் யாத்திரிகர் தலமாகிறது

23-ம் அருளப்ப பாப்பரசர் பிறந்த இடமாகிய பேர்காமோ கிராமத்துக்கு அருகாமையிலுள்ள சோற்றே இல்மொன்றே என்னும இடம் வருடாவருடம் ஒரு யாத்திரிகர் தலமாக கீர்த்தி பெற்று வளர்ந்து வருகின்றது. இங்கே 23-ம அருளப்ப பாப்பரசர் 1881-ம் ஆண்டு பிறந்தார். கடும் உழைப்பினல் தேகசுகம் தளர்ந்தபோதெல்லாம் அவர் இங்கு ஓய்வு எடுத்து வந்தார். 1964-ம ஆண்டு அவரது மரணத்தின் முதலாம வருடநிறைவின்போது ஆரம்பமான யாத்திரிக பிரசித்தி வளர்ந்து கொண்டே வருகின்றது. இத்தாலி தேசத்தவர் மாத்திரமன்றி மறுதேச மக்களும், ஆசிய ஆபிரிக்க, அமெரிக்க மக்களும் அங்குசென்று வருகின்றனர். 23-ம் அருளப்ப பாப்பரசர் புனிதபதவி விரைவில் எய்துவாரெனும் செய்தி பரவத் தொடங்கினதன்பின் யாத்திரிகர் தொகை பன்மடங்கு அதிகரித்திருக்கின்றது. அவர் பிறந்த சிறுவீட்டிலுள்ள அறையைத் தரிசிப்பதிலும் அவரது சகோதரனுகிய சவேரியோ றொன்காலி என்னும் வயோதிபருடன் சில வார்த்தைகள் பேசிக்கொள்வதிலும் இந்த யாத்திரிகர்கள் பெரும் ஆவல் காட்டுகின்றனர்.

## ஒத்துநிற்கும் பெண்கள் இயக்கம்

பெல்பஸ்ற் நகரில் இன்று "ஒத்துநிற்கும் பெண்கள் இயக்கம்" ஒன்று வளர்ந்து வருகின்றது. அதற்குத் தலைமைதாங்குபவர் செல்வி மொனிக்கா பற்றர் என்பவரே—அவரது பெற்றோர் அயர்லாந்து தேசத்தவராயினும் அவர் இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்து பட்டதாரியாகி உத்தியோகம் நடத்தி வந்தவர்—சில வருடங்களுக்கு முன்பே பெல்பஸ்ற் நகரில் கணவனுருடன் வசிக்க வேண்டியவரானுர்—தொடக்கத்தில் அங்கு சீவிப்பதில் வெறுப்பு உடையவராயினும் நாளாகதியில் பெல்பஸ்ற் சீவியத்தில் மிகவும் விருப்புடையவராயினுர். கலகங்கள் தொடங்கின காலத்தில் இவர் கத்தோலிக்கராயினும் புறொட்டஸ்தாந்து பெண்களுடன் ஒன்றித்த மனப்பான்மையுடன் சமூகசேவையிலிறங்கினுர்—இருவருடங்களுக்கு முன் இவர்களது இயக்கத்தில் 50 பேரே அங்கம்வகித்தனர்—ஆனுல் இன்று 2000 தொகையுடையதாகவும், சிறந்த ஒற்றுமை வாழ்வை வளர்த்து வருவதாகவும் இந்த இயக்கம் விளங்குகின்றது. ஆங்கில அரசாங்கம் அண்மையில் கையாண்ட முறைகளுடன் இத்தகைய இயக்கங்களும் ஒன்றுசேர்ந்து விரைவில் அங்கு சமாதானம் நிலவும் அறிகுறிகளுண்டு.

## கத்தோலிக்க கலகக்காரர் சார்பில் இந்திய மேற்றிராணியார் கேட்ட மன்னிப்பு

சிலவாரங்களுக்குமுன் இந்தியாவில் திரிவாந்திர பிரிவில் கடற்தொழிலாளரான சிலகத்தோலிக்கருக்கும், இஸ்லாமியருக்குமிடையில் நடந்த கலகங்களில் கத்தோலிக்கர் செய்துகொண்ட பிழைகளுக்காக அவர்களது ஆயரான பீற்றர் பெறெரு அடிகளார் பகிரங்கமாக இஸ்லாமியர்களின் மன்னிப்பைக் கேட்டிருக்கின்றூர். இக்கலகங்களின்பயனுகச் சில உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டது மாத்திரமன்றி, பல பள்ளிவாசல்களும், கத். தேவாலயங்களும் தீக்கிரையாக்கப்பட்டன. சென்றவாரம் பெறெரு அடிகளார் கேரளதேச முதன்மந்திரி அச்சுதமேனன் அவர்களுடனும், இஸ்லாமிய சமய அதிகாரிகளுடனும் சேதப்பட்ட பலதலங்களையும் தரிசித்தார். அதன்பின் அவர் கத்தோலிக்கருக்கு விடுத்த அறிக்கையில் கிறிஸ்தவ தர்மத்தின்படி பகைத்துக்கொள்ளுதலும், வன்மம் பாராட்டுதலும் முற்றுகத் தவிர்க்கப்படவேண்டிய ஒழுக்கங்களாகுமெனக்கூறி அவர்களின் சார்பில் மன்னிப்புக் கேட்டருளினுர்.

### கொழும்பில் நடத்தப்படும் திருமண ஆயத்த வகுப்புகள்

கத்தோலிக்கர், மறுகிறீஸ்தவ சபையினர் மாத்திரமன்றி பிறசமயத்தவரும் கொழும்பில் "குடும்பசேவை" இயக்கத்தினரால் தற்போது ஒவ்வொரு பௌர்ணமி தினமும் பம்பலப்பிட்டி காலிவீதித் தெரு, இல. 198இல் நடாத்தப்படும் வகுப்புகளில் பங்கு பெற்றுக்கொள்ள வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருமணதுறைகளில் சிறப்பான நிபுணத்துவம் படைத்த கல்விமான்கள் பேச்சாளர்களாகவும் ஆலோசகர்களாகவும் பணியாற்றுவார்கள். இம்மாதம் 27-ந்தேதி நடைபெற இருக்கும் வகுப்புகள் இந்நிறுவன தலைவர் வண. மேர்வின் பெர்ஞந்து சுவாமியாரின் தலைமையில் நடைபெறும். இதற்குமுன் நடைபெற்றுள்ள வகுப்புகளை பலசமய மக்களும் ஆதரித்ததன்மை இந்த இயக்கத்துக்குப் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு வேறுபல இடங்களிலும், சுதேசபாஷைகளிலும் இவற்றை நடப்பிக்க வேண்டுமென்ற ஊக்கத்தை அளித்திருக்கின்றது

## அப்போஸ்தலர்களின் கல்லறையிலே

இங்கிலாந்திலே பெட்போட்நகரின் பங்குக் குருவரான வண. அந்தோனி ஹல்ம் சுவாமியார் நெடுநாளாகக் கொண்டிருந்த பேராவல்லொன்றை இப்போது பூர்த்திசெய்கின்றூர். அப்போஸ்தலரான புனித தோமையாரின் கல்லறைஒன்று நீங்கலாக ஏனைய அப்போஸ்தலர்களின் கல்லறைகளிலே இதுவரை திவ்வியபூசை நிறைவேற்றியிருக்கின்றூர். இந்தியாவின் அப்போஸ்தலரான புனித தோமையார் மரணமடைந்த 1900 ஆம் ஆண்டு நிறைவு [illegible] லே இந்தியாவிலுள்ள [illegible] லாப்பூருக்கு இங்கிலாந்து, வேல்ஸ் மேற்றிராணிமார்களின் பிரதிநிதியாக இவர் வந்திருக்கின்றூர்

புனித தோமையார் ஒரு தச்சுத் தொழிலாளியாக இந்தியாவுக்கு வந்ததாகச் சொல்லப்படுகிறது. மலையாளக்கரை நீளம் வசிக்கும் கிறிஸ்தவர்கள் அங்கு திருச்சபையை அடியிட்டவர் அவரேயென உரிமை பாராட்டுகின்றூர்கள். அவர் சென்னை நகரிலிருந்து எட்டுமைல் தூரத்திலுள்ள பெரிய குன்றின்மேல் ஈட்டி [illegible] டு வேதசாட்சியானுரென்றும், அந்நகரின் புறநகராகத் தற்போது இருந்துவரும் மைலாப்பூரில் அவர் அடக்கஞ் செய்யப்பட்டாரென்றும பாரம்பரியம் கூறுகின்றது. அவரின் திருஎன்புகள் புனித தோமையாரின் ஆசனக்கோவிலில் பூச்சியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

## தேவதாயாரின் வணக்கத்தை வத். சங்கம் குறைத்து விட்டதா?

பெல்ஜியன்தேச கருதினுல் சுயேன்ஸ் அடிகளார் அண்மையில் ஐக்கிய அமெரிக்க தேசத்தில் செய்த சுற்றுலாவின்போதுபல இடங்களிலும் தேவதாயாரின் வணக்கத்துக்குக் குறைவு ஏற்படாதிருக்கக் கத்தோலிக்கர் விழிப்பாயிருக்க வேண்டுமென்று பிரசங்கித்திருக்கிறூர். வத்திக்கான் சங்கம் தேவதாயாருக்குக் கத்தோலிக்கர் செய்துவந்த வணக்கத்தைக் குறைக்க எதுவும் செய்துவிட வில்லையென்பதை அவர்விளக்கி இதுபற்றி உலகில் சில இடங்களில் ஏற்பட்டிருக்கும் தப்பபிப்பிராயத்தை வெளிப்படுத்தினுர். "கிறிஸ்துநாதரை உலகுக்குப் பெற்றெடுத்துத்தந்த அருமைத் தாயாருக்கு உரிய வணக்கத்தைச் செலுத்த எவர்தான் தடைசெய்யத் துணிவார்?" என அடிகளார் பல இடங்களிலும் முழங்கியிருக்கின்றூர்.

### போலாந்தில் ஏனே இச்சின்னத்தனம்?

போலாந்தில் திருச்சபைக்கும் அங்குள்ள புதிய அரசாங்கத்துக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட்டுவருகின்றதென உலகம் அபிப்பிராயப்பட்டுவரும் இக்காலத்தில அங்கு போலாந்து தலைநகரத்துக்கு அண்மையில் நடந்திருக்கும ஒரு சின்னத்தனம் இந்த நல்லுறவு முடிந்துவிடப் போகன்றதோ எனும ஒரு பயத்தை உண்டுபண்ணியிருக்கின்றது. சொறெசாடுசா என்னும் கிராமத்திலுள்ள ஒரு கோவிலை போலாந்து அரசாங்க அதிகாரிகள் முற்றுகையிட்டு, சற்பிரசாத அப்பங்களைப் பேழையிலிருந்து வீசியெறிந்து இவ்விதமாக சமய அவதூறுகள் இயற்றியுள்ளனர். இது கேள்விப்பட்ட போலாந்து கருதினுல் வைசின்ஸ்கி அடிகளார் போலாந்து பிரதமருடன் தொடர்பு கொண்டிருக்கின்றூர். எனினும் அக்கோவில் அரசாங்க அனுமதியுடன் கட்டப்படவில்லையென்றும், ஆகவே அக்கோவிலைத் தகர்த்தெறிவதில் ஈடுபட்ட அதிகாரிகள் சட்டத்துக்குள்ளேயே நடந்துள்ளார்களென்றும் வாதாடப்படுகின்றது—அப்படியாயினும் இத் தேவதூஷனங்களும் அவமதிப்புகளும் தவிர்க்கப்பட்டாதனவா?

### வத்திக்கான்தோட்டம் பிரயாணிகள் பார்வையிடலாம்

வத்திக்கான் குன்றின் வடக்கு-மேற்குச் சரிவுகளில்உள்ள தோட்டத்தையும் அதில் அடங்கியுள்ள புகையிரதஸ்தானம், வானெலி நிலையம, லூர்துகெபி மற்றும் சரித்திரப் பிரசித்திபெற்ற நிறுவனங்களையும் பார்க்கவிரும்பும் பிரயாணிகள் தகுந்த கண்காணிப்புடன் கூட்டம் கூட்டமாகச் சென்று பார்க்க அனுமதிக்கப் பட்டிருக்கிறூர்கள். இதற்கென விசேஷ கட்டணங்கள் உண்டு. அனுமதிச் சீட்டுகளை வத்திக்கான் உல்லாசப் பிரயாண காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### திருச்சபையை நாம் நேசிக்க வேண்டும்

"திருச்சபை அதிகாரிகளிலும் அங்கத்தவர்களிலும் பல குற்றங்கள் இருப்பது உண்மையேயாயினும் திருச்சபையை நேசித்து, வளர்த்து, குறைகளைத் திருத்துவது கத்தோலிக்க சமூகத்தினரின் கடமையாகும்" எனப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் இருவாரங்களின்முன் வத்திக்கானுக்குப் 15மைல்களுக்கு அப்பாலுள்ள புனித பேதுறு டேமியன் திருஷேத்திரத்தில் கூடியிருந்த யாத்திரிகர்களுக்கு உபதேசித்தார். மனித பலவீனங்களுடைய அங்கத்தவர்கள் அடங்கிய திருச்சபையில் குறைகுற்றங்கள் இருப்பது இயற்கையே. ஆனுல், நல்நோக்கமின்றி குறை கூறுவதும் ஆதாரவற்ற கதைகளைப் பரப்புவதும் உத்தம கத்தோலிக்கர்களின் முறையாகாஎன பரிசுத்ததந்தை துக்கத்தோடு சுட்டிக் காட்டினுர்.

### கம்பளை ஆலயத்தில்

கத்தோலிக்க மக்கள் சிங்கள-தமிழ் கலாச்சாரங்களைப் பொருட்படுத்துவதில்லையெனும் பிழையான எண்ணத்தை அண்மையில் கம்பளைக் கத்தோலிக்கர் மக்கள் மனதிலிருநது அகற்றிவிடத்தக்க முறையில் இவ்வருட சிங்கள புதுவருட தினத்தைநம்நாட்டுக் கலாச்சாரங்களுக்கு இணங்கக் கொண்டாடியிருப்பது கத்தோலிக்கர் யாவருக்கும் மகிழ்ச்சிக்குரிய கருமமாகும். அன்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பலிபீடத்திலிருந்த சற்பிரசாதக் கூட்டுக்குப் பின்னுல் நமது நாட்டுக் கொடியும், பாப்பரசரது கொடியும் தொங்கவிடப்பட்டிருந்தன. தென்னம்பூக் கொத்துகளும், மாவிலைத் தோரணங்களும் வெளிநாட்டுப் பூக்களுக்குப் பதிலாகப் பீடததை அலங்கரித்தன. கழங்கமற்ற இயற்கைச் செல்வத்தை வேண்டும்பாண்மையில செம்புப் பாத்திரங்களில் தானியங்களும், இலைகுழைகளும், மலர்களும, பழங்களும் நிறைந்திருந்தன. திருப்பலிப் பொருட்களுடன் பாலும், பழமும,பலகாரவகைகளும்,பாற்சோறும் பவனியாய்க் கொண்டுசென்று ஒப்புக்கொடுக்கப் பட்டன. சங்கீதம், திருவாசகங்கள், உபந்நியாசம் யாவும் சந்தர்ப்பத்துக்குமிகப்பொருத்தமாகவே இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சத்தியவேத பாதுகாவலன்

# பங்கும் மக்களும்

கத்தோலிக்க மக்கள் அனைவரும் ஏதாவது ஒரு விசாரணைப்பங்கின் அங்கத்தவர்களாக இருப்பார்கள். எந்தக் குழுவைச் சேர்ந்தவருக்கும் அக்குழுவின்மட்டில் கடமைகள் உண்டு. கடந்துகொள்ளவேண்டிய முறைகளும் உண்டு.

பங்குக் கிறிஸ்தவர் தமது விசாரணைக் குருவானவருக்குத் துணைபுரியவும், ஏனைய பங்கு மக்களின நலனுக்காக உழைக்கவும், பங்கின் நிர்வாகத்துக்கு வேண்டிய நிதியுதவி அளிக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பது யாவருமறிந்ததே. ஆனல் பங்கிலிருந்து நாம பெறக்கூடிய முழு நன்மையையும் அடைந்துகொள்ளவும், பங்கின் நிர்வாகத்துக்கு எமது ஒத்துழைப்பை அளிக்கவும், ஏனைய மக்களுக்கு எம்மாலான சேவையைச் செய்யவும் சில முறைகளைக் கடைப்பிடிப்பது நலமாயிருக்கும்.

முதலாவதாக பூசைக்கோ அல்லது வேறு திருச்சடங்குகளுக்கோ அல்லது பங்குக் கூட்டங்களுக்கோ சமுகமளிக்கும்போது தாமதமின்றி நேரத்துக்குப் போவதை வழக்கமாகக் கொள்ளவேண்டும். அரைகுறையாக எதிலும் பங்குபற்றுவது நமக்கும் பிறருக்கும இடையூறாகவே இருக்கும். நாம் தாமதித்துச் சென்று எமது ஆர்வக்குறைவை வெளிப்படுத்தினல் அது விரைவாக மற்றவர்களுக்கும் தொற்றிக்கொள்ளும்.

ஓர் ஆராதனைக்கோ வேறு காரியத்துக்கோ சமுகமளித்திருக்கும்போது அதில் முழுமையாகப் பங்குபற்ற முயல வேண்டும். ஆலயத்தில் நாம் பிரசன்னமாயிருப்பதுமட்டும் போதாது. பொது வழிபாட்டில் உரத்துச் செபிக்கவேண்டிய பல பகுதிகள் இருக்கின்றன. முழந்தாளிடவும், எழுந்துநிற்கவும் வேண்டிய பகுதிகள் இருக்கின்றன. அவற்றிலெல்லாம் உரிய முறைப்படி பங்குபற்றவேண்டும். காணிக்கை எடுக்கப்படும்போது சகலரும் அளித்தால்தான் அது அழகாகவும் முறையாகவும் இருக்கும். இதுவிதத்தில் நாம் எமது பிரிந்த சகோதரரிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடியது எவ்வளவோ உண்டு.

பங்குக் கூட்டங்களில் சேர்ந்தவர்கள் தத்தம் இயக்கங்களோடு ஒழுங்காக வழிபாடுகளில் பங்குபற்றுவது நன்று. கூடுமானவேளைகளில் முழுக் குடும்பத்தினரும் ஒன்றாக நற்கருணை உட்கொள்வது ஓர் அழகான வழக்கமாகும்.

ஏதாவது காரணத்தின்நிமித்தம் பங்குக்குருவரைக் காணவேண்டியிருந்தால் பல நேரங்களிலும் போய் அவரைத் தொந்தரவு படுத்தாமல் அவருக்கு வசதிப்பட்ட நேரத்திலேயே அவரைக் காண்பது நன்று. தேவதிரவிய அனுமானங்கள், திருப்பலி முதலியவற்றை ஒழுங்கு செய்யும்போதும் போதியகாலத்துக்கு முன்கூட்டியே அவருடன் கலந்தாலோசிப்பது உகந்தது.

பங்கில் அசட்டையான கிறிஸ்தவர் யாராவது இருந்தால் அவர்களைப்பற்றிப் பங்குக் குருவரிடம் அறிவிப்பது நன்று. அவர் அவர்களோடு தொடர்புகொண்டு அவர்களை நல்வாழ்வுக்குக் கொண்டுவர இது உதவியாயிருக்கும். பிறமதத்தினர் யாராவது திருச்சபையைப்பற்றி அறிய விரும்பினல் தம்மாலான விபரங்களை அளிப்பதுடன் மிகுதியானவற்றை அவர்கள் அறிந்துகொள்ள வழிகாட்டுவதும் கத்தோலிக்கர் தமது விசுவாசத்தைப் பரப்புவதற்குக் கைக்கொள்ளவேண்டிய பணிகளாகும். கத்தோலிக்காகிய நாம் எப்போதும் உலகத்தவரின் பார்வைக்கு இலக்காயிருக்கிறோம். திருச்சபையில் அபிமானமற்வவர்கள்கூட தமது கிறிஸ்துவவாழ்வில் அசட்டையாக இருப்போரிடம் நன்மதிப்புக்கொள்ளமாட்டார்கள். அசட்டையான கிறிஸ்தவனைப்போல தனக்கும் திருச்சபைக்கும் உலகுக்கும் தீங்கு இழைப்பவர் வேறெவருமில்லை.

● எகிப்திலே நுபியாப் பகுதியிலுள்ள நீலநதிக்கரையின் பக்கமாக விருக்கும் 5,500 ஆண்டுகளுக்கு முந்திய ஒரு சவக்காலையை ஆராய்ச்சி செய்தவிடத்து, அதிலே பழுதடைந்துபோன 400 சவங்களும், பழுதடையாமலிருந்த 1,000 சவங்களும இருந்தனவாம். அவற்றுடன் பழைய கால மட்பாண்டம், முத்துப் பதக்கம், விலையுயர்ந்த ஆபரணங்கள் போன்றனவும் கண்டெடுக்கப்பட்டனவாம்.

# கிறிஸ்துவின் உத்தானமும் நம் உயிர்ப்பும்

கிறீஸ்து நாதருடைய அற்புதங்களில் எல்லாம தலைசிறந்தும அதிபிரபல்யம் பெற்றதுமாய் உள்ளது, அவர் மரித்த மூன்றாம நாள் தாம் வாக்குப் பண்ணியபடி உயிர்த்த சம்பவமாகும். தமது இந்த உத்தானத்தின் மூலம தாம இறைமகன்—கடவுள் அவதாரம—என்று உலகுக்கு நிரூபணம செய்கிறார். தாம போதித்த விசுவாச சத்தியங்களுக்கெல்லாம் அடித்தளமாக தமது உத்தானத்தையே கிறீஸ்து அமைக்கத் திருவுளம கொள்கிறார்.

தமது உத்தானத்தைப் பற்றி, கிறீஸ்துநாதர் தமது சிலுவை மரணத்தின் முன்பே பலமுறை தெளிவாகவும், உவமைகள் மூலமும் சொல்லி இருக்கின்றார். அவரை ஏற்றுக் கொள்ளாத யூதர்; நீர் தாம் உலகம் காத்திருந்த மெசியாவெனில், அதற்கு ஓர் அடையாளம் காட்டுதல் வேணடும் எனக் கேட்டனர். தாம் மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுவதையே தமது தெய்வ அவதாரத்தின் கடைசி அடையாளமாக அவர் எடுத்துச் சொன்னார்.

"கெட்டுப்போன விபசார தலைமுறை அருங்குறியொன்று கேட்கின்றது. யோனாஸ் இறைவாக்கினரின் அருங்குறியேயன்றி வேறு எந்த அருங்குறியும் அதற்கு அளிக்கப்படமாட்டாது. எவ்வாறு யோனாஸ் மூன்று பகலும் மூன்று இரவும் திமிங்கிலத்தின் வயிற்றில் இருந்தாரோ அவ்வாறே மனுமகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார். மத். XII -- 39. 40.

தம்முயிரை மன்னுயிருக்காக ஈந்த, மீண்டும் அதைக் கைப்பற்றிக் கொள்வதை யேசு தம்சீடருக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்தியும் இருந்தார். என் ஜீவனை மறுபடியும் கைக்கொள்ளும்படிக்கு நான் அதைக் கொடுக்கிறபடியால், என்பிதா என்னை நேசிக்கிறார். என்னிடத்தில் இருந்து அதைப்பற்றிக் கொள்கிறவன் ஒருவனுமில்லை. ஆனல், நானாக அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரமுண்டு. மறுபடி அதைக் கொள்ளவும் அதிகாரமுண்டு. இந்தக்கட்டளையை என்பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன"என்கிறார் யேசுபெருமான்.

கிறீஸ்துநாதர் இவ்விதம் யூதருக்கும் தமது சீடருக்கும் தமது உத்தானத்தைப்பற்றி அறிவுறுத்தி இருந்தும் அவர்கள அதை ஒரு ரூபகமாக எடுத்தார்களே அன்றி உண்மையில் கிறீஸ்து மரணத்தை வெற்றி கொணடு ஜெடசீலராய் எழுவார் என்று கருதி இருக்கவில்லை. "சிலவேளை அது நடந்துவிட்டால்" என்று யூதமதகுருக்கள் அஞ்சினர்.

அப்போஸ்தலரும் ஆரம்பத்தில் அவரது உத்தானத்தைப் பற்றி ஐயப்பாடு கொண்டிருந்தாலும், அவர் உத்தான...

மாகி அவர்களுக்கு தரிசனம் கொடுத்து, அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தியவை, அவரது உத்தான செய்தியையே தாங்கள போதித்த நவமான வேதத்துக்கு அசையாத அத்திவாரம என அவர்கள் எடுத்துச சொல்லுவாராயினர்.

"கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்திலரெனில், எங்கள பிரசங்கமும வீருதா, உங்கள் விசுவாசமும வீருதா" என்று புனித சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில குறிப்பிடுகின்றார்.

ஜி. ஏ. பிள்ளை

தலைமை அப்போஸ்தலரான புனித பேதுருவும், கிறீஸ்துவின உத்தானத்தை மையமாக வைத்தே ஆரம்ப காலத திருச்சபைக்கு அடியிடுகின்றார். "எங்கள் குருவை நீங்கள் பிடித்துச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள். அவர் தமது தேவ வல்லமையால் உயிர்த்தெழுந்து விட்டார் இதற்கு நாங்களே சாட்சி" என்று ஐயப்பாட்டுக்கு இடமின்றி வாதித்க, ஒரே நாளில் மூவாயிரம் பேரை கிறீஸ்துவில் ஞானமுழுக்குப் பெறச் செய்கின்றார்.

இவ்வாறாக ஆரம்பகாலத் திருச்சபை முதல் கிறீஸ்துவின் உத்தானம் ஐயத்துக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. திருச்சபை கிறீஸ்துவின் உத்தானத்தை ஒரு விசுவாச சத்தியமாகவும் பிரகடனம் செய்துள்ளது.

கிறீஸ்துவர்களாகிய நாம் கிறீஸ்துவின் உத்தானத்தை ஏற்று விசுவசிக்கையில், கிறீஸ்துவின் அந்த உத்தானம் நம் உயிர்ப்புக்கு முன்னோடி என்பதை ஊன்றி உணர்வதில்லை. கிறீஸ்துவின் உயிர்ப்புத்தான் நம் வாழ்வுக்குத் தென்பளிப்பது. துன்பசாகரமாய் இவ்வுலக வாழ்வின் முடிவில் கிறீஸ்துவின் உத்தானத்தின்பயனாக நாமும் உயிர்ப்பும பெறுவோம், மறு உலக வாழ்வை நாம் நம் சரீரத்தோடு சேர்ந்து அனுபவிப்போம என்ற விசுவாச அடித்தளத்தில் எழுந்த நம்பிக்கை இல்லை எனில நாம் வாழ்ந்ததும், வாழ்வுக்காக நாம இவ்வுலகில பட்ட துன்ப துயரங்களும வீண என்றே கூறவேணடும். அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணத்தில "மாமிச உத்தானத்தையும் விசுவசிக்கிறேன்" என்று உச்சாடணம் செய்கின்றோம். இந்த மாமிச உயிர்ப்புக் கொள்கையானது பழைய ஏற்பாட்டு காலத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

—வளரும்

## கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள்-வைகாசி

தமிழ்ச்சேவை 1

7ஆம் திகதி ஞாயிறு
மாலை 7-00 — 7-30
"பரதேசிமகன்" முருங்கன் பங்கு - இளைஞர் மன்றம்.

13, 14, 15ஆம் திகதிகளில்
காலை 6-25—6-30
கத்தோலிக்க நற்சிந்தனை வண. பிதா றெஜி ராஜேஸ்வரன்.

21ஆம் திகதி ஞாயிறு
மாலை 7-00 — 7-30
"வா மகனே வா" வளர் கலைமன்றம்—வங்காலை.

27, 28, 29ஆம் திகதிகளில்
காலை 6-25 — 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை வண. பிதா பெனற் கொன்ஸ்ரன்ரயின்,

குறிப்பு:—
இந் நிகழ்ச்சிகளைப்பற்றிய உங்கள் கருத்துக்களைப் பின்வரும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

சமய நிகழ்ச்சி தயாரிப்பாளர்,
தமிழ்ச் சேவை 1,
இலங்கை
ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,
கொழும்பு — 7.

## சிறந்த அரசியல்ஞானிகளை திருச்சபை ஆதரிக்கும்

றோமைநகரில் அண்மையில் கூடிய மகாநாட்டின் ஐரோப்பியதேச கிறிஸ்தவ ஜனநாயக அரசியல்வாதிகள் வத்திக்கான்சென்று பரிசுத்ததந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரைத் தரிசித்தபோது அவர்களுடன்நடத்திய சம்பாஷணையில் திருச்சபை எந்த அரசியற்கட்சியையும்விசேஷமான் முறையில் ஆதரிக்கவில்லையென்றும் சிறந்த அரசியல் ஞானிகளையே ஆதரிக்கிறதென்றும் பரி. தந்தை அவர்களுக்குக்கூறினர். சுதந்திரம், மனித உரிமை, குடும்ப உரிமை, சொந்த உற்சாகம் ஆகியன பங்கப்படாத கொள்கைகளை எவர் ஆதரிப்பார்களோ அத்தகையோரையே திருச்சபை ஆதரிக்க விரும்புமென மேலும் அவர்களுக்குப் பாப்பரசர் கூறினர்.

## பெல்பஸ்ற் துன்பதாரிகளுடன் ரும்சேஅடிகளின் விருந்து

பெல்பஸ்ற் கத்தோலிக்கரும், புறெட்டஸ்தாந்தினரும் அடங்கிய 200 தாய்மாரும், பிள்ளைகளும் லண்டன்மாநகரின் மேற்குப் பகுதியிலுள்ள கிறிஸ்தவ சபையினரின் அழைப்பின் விளைவாக ஒரு வாரம் இங்கிலாந்தில் தங்கி ஆறுதலடைய அண்மையில் வசதிகள் செய்யப்பட்டிருந்தது. இக்குழுவினரின் மத்தியில் அங்கிளிக்கன் சபைத் தலைவரான டக்றா ரும்சே அடிகளார் தமது விருத்தாப்பிய வயதையும் பொருட்படுத்தாது அவர்களுடன் தங்கி அவர்களது போசனங்களில் பங்குபெற்று ஒருநாளைக்கழித்தார். இவ்வாறு அவர்களுடன் அளவளாவி ஒற்றுமையை வளர்த்து அவர்களது துன்பங்களில ஒரு சிறிதளவாகுதல் ஆறுதல் அளிப்பதே அடிகளாரது நோக்கமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நீயும் நடிக்கும் நாடகம்

## பிடிபட்ட படலம்

(முன் தொடர்ச்சி.)

இவ்வளவு நேரமும் கிட்ட முடியாது தடைபட்டு நின்ற யூதாஸ் "அவரை அணுகி 'றபி வாழ்க' என்று சொல்லி அவரை முத்தமிட்டான்" (மத். 26. 49) முத்தமிடல் யூதரிடையே அன்பு, மரியாதையின் அடையாளம். கிட்டிய உறவினர், அருமையான ஆசிரியர்போன்றவர்களைச் சந்தித்தபோது முத்தம் கொடுப்பது வழப்பம். ஆம், யூதாசை யேசு விசேட போசன நேரத்தில் அன்பின் அடையாள அப்பம் (அது பிரசாதமல்ல) கொடுத்து அவசர அலுவலாக அல்லவா அனுப்பியிருந்தார். அப்போது இரகசியமாகச் சொன்னது பேதுரு அருளர் இருவருக்கும் பதியவில்லை, மறந்துவிட்டார்கள். இதோ, ஆபத்து நேரிட்ட நேரத்தில் உதவிக்கு வந்து சேர்ந்தவன் போலே நெருங்கி முத்தமிடுகிறான். யேசு இதையெல்லாம் அறிந்தார், முன்னரே அறிவித்தார். ஆனால், அது யூதாசின் மமதை மூளையுள்ளே நுழையவில்லை. பொறுத்தல் பெறக் கிடைத்த சிறந்த சந்தர்ப்பத்தை வீணாக்கிவிட்டு விலகுகிறான். அவன் மனத்தில் இருள் அடர்ந்தது மட்டுமல்ல அவன் இதயமும் கடும் கல்போல இறுகிவிட்டது. இரட்சகரின் விடை அதை வெளியாக்குகிறது. "நண்பா எதற்காக வந்தாய்" (மத். 26. 30). அதாவது கூட்டாளி இதற்காகவா வந்தாய்? "யூதாஸ், முத்தமிட்டா மனுமகனைக் காட்டிக் கொடுக்கிறாய்" (லூக். 22. 48). சரி, செய்யவந்ததைச் செய்துமுடி; என்னைக் கைபளிக்கிறேன்.

பார்த்துக் கொண்டிருந்த சேவகர் யூதாஸ் கொடுத்த அடையாளத்தின்படியே "அவர்கள் அவர்மேல கை போட்டுப் பிடித்தார்கள்" (மாற். 14. 46). இவ்வளவும் செய்வதேதென்பது தெரியாது அதிசயித்துக் கொண்டிருந்த சீடர்களும் குருவைக் காக்க முடுகினார்கள். "ஆண்டவரே வாளால் வெட்டுவோமா" (லூக். 22. 49) என்று உத்தரவு கேட்டார்கள். ஆனால், விடைகிடைக்கு முன்னே பேதுரு வாளை இழுத்துப் பெரிய குருவின் ஊழியனொருவனைத் தாக்கினார். அவன் விலகினான். எனினும் அவனுடைய வலது காது அறுபட்டது. இந்த விபரங்களை அளிக்கும் அருளர் அவன் பெயர் "மால்குஸ்" என்கிறார். இது யூதருக்கு அன்னியம், நாபத் தேயருக்குப் பொது. அதன் பொருள் "ராசா" என்பது. ராசாவின் குட்டிக்காது வெட்டுப்பட்டது பெரிய அவமானம். இனிமேல் அவர் மனிதருக்குள்ளே வெளிப்பட முடியாது. யேசு தடுத்தார். சேவகரும் சீடரும் பின்வாங்கினார்கள். "போதும் விடுங்கள்" (லூக். 22. 51). சீடர்களின நல்லமனம் அவருக்குத் திருப்தி போலும். அவர்களுடைய கெட்டித்தனம் தேவையில்லை.

"உன் வாளை உறையிலே போடு. ஏனெனில் வாள் எடுப்போர் எல்லாரும் வாளாலே மடிவர்" (மத். 26 52). இந்த வேளையிலும் யேசு சற்போதனை செய்வதிலேயே கருத்தாயிருக்கிறார். இது காயீன் முதல் கடைசித் துட்டன் மட்டும் மனிதர் செய்யும அட்டூழியத்தைச் சுட்டிக் காட்டுகிறது. வெறியும் காமமும், கோபமும் கொலையும் மனித அழிவுக்கு வழி என்று காட்டுகிறார். கடவுளின் பிள்ளைகளின் வாழ்க்கை வழி அதுவல்ல என்று போதிக்கிறார். தின்மை செய்தவனுக்கும் நன்மை செய்வதே நமது கடமை என்று செயலாலே காட்டுகிறார். "அவன் காதை தொட்டுக் குணப்படுத்தினார்" (லூக். 22. 51). நன்மை செய்ய முடியாவிடில் விடலாம். தின்மை செய்யவோ எமக்கு உரிமை இல்லை அது தான் கிறிஸ்துவின சொல்லும் செயலும் கற்பிக்கும் பாடம்.

சீடரின் படைபலம் யேசுவுக்குத் தேவையில்லை. அதை முன்னரே காட்டிவிட்டார். மேலும், வானதூதரே அவருக்குச் சேவை செய்யக் காத்திருக்கின்றனர். விரும்பிக் கேட்டால் உடனே வருவார்கள். பன்னிருசேனை என்றது ரோமானரின் முழுச்சேனை வந்தாலும் எதிர் நிற்கமாட்டார்களென்று காட்டவே. ரோமானர் சேனை ஒன்றில் 4000 முதல் 6000 வீரருண்டு. அதுபோலே "திறையானு" காலத்தில் இருபது மட்டிலிருந்தது. ஆனால், எந்த யுத்தத்திலாவது அவர்கள் 12 சேனைகள் பாவித்ததாகவில்லை. இந்தச் சேனைகள்தான் ரோமைப் பேரரசைக் கட்டிக்காத்துவந்தன. மீட்பர் உலகில் வந்தது உலக யுத்தம் நடத்தி வெற்றியீட்டவல்ல ஞானயுத்தம் நடத்தவே. ஆன்மசக்திகளே இதிற் பாவிக்கவேண்டியவை. இதற்கு அவர் தெரிந்தது உடல்வலிமை, உபகரண பெலன் கொண்ட 12 சேனையல்ல சாதாரணமான 12 ஏழைத் தொழிலாளிகளையே. ஏனெனில். சாத்தானுடன் சங்கிராமம் செய்து வெற்றிபெற வேறுவழியே வேண்டும் (எபே. 6. 12). தேவ வார்த்தையின் உண்மையும் அன்பும்தான் அதற்கவசியம். அதை விட்டு "அப்படிச் செய்தால் இவ்வாறு நடைபெற வேண்டும என்னும் தீர்க்க வாக்கு எவ்வாறு நிறைவேறும்" (மத். 26. 54). "தந்தை எனக்குத் தந்த பாத்திரத்தை நான் பருக வேண்டாமா?" (அரு. 18. 11.). இதுதான் கிறிஸ்துவின் வாழ்க்கை மர்மத்தின் திறவுகோல்; மனிதருக்கு அவர் கற்றுத்தந்த பாடம்; நாம் கடவுள் பிள்ளைகளாகும ஒரேவழி.

கூலிக்காரரின் கூட்டத்தின் பின்னே வேறு மரியாதையான மனிதரும் காணப்பட்டார்கள். காரியத்திலே கரிசனையுள்ள சங்கத்தாரிலே சிலர் அங்கு நின்றார்கள். கெதியாக அமைதியாக அலுவல் முடியுமென்று எதிர்பார்த்தவர்கள் கால தாமதம்பற்றி அச்சம் கொள்ளலானார்கள். காரணமேதென்று நேரிலே பார்க்கப் புறப்பட்டுப்பின் தொடர்ந்தார்கள். ஒப்பற்ற ஒரு வெற்றியிலே நேரடிப் பங்குகொள்ள ஆருக்குத்தான் ஆசையிராது. அதோடு தன்கையே தனக்குதவி என்றவாறு தேவையானால் தாமே செயலிலிறங்கத் தயாராயிருப்பது விமரிசையல்லவா! இவர்கள் மறைந்து எட்டநின்றாலும் கிறிஸ்துவுக்கு ஒழிக்க முடியவில்லை. அவர்களுக்கும் ஒரு எச்சரிக்கை விடுக்கவிரும்பினார். "யேசு தமமைப் பிடிக்கவந்திருந்த தலைமைக் குருக்களையும் கோவிலின் காவற் தலைவர்களையும் மூப்பர்களையும் நோக்கி "நீங்கள் கள்வனிடம் வருவதுபோல் வாளோடும் தடியோடும் வந்தீர்களோ? நாள்தோறும் கோவிலில் நான் உங்களோடிருந்தும் நீங்களென்மேல் கைவைக்கவில்லை. ஆனால் இது உங்கள் நேரம். இருள் ஆட்சிபுரியும் நேரம் என்றார்" (லூக். 22. 52—3). பெரிய மனிதரின் சின்னத்தனத்தைக் காஸ்யமாகக் கண்டிக்கிறார். கள்வன் என்றது கொள்ளைக்காரன் மட்டும்மல்லப் புரட்சி செய்யும் கலகக்காரனென்றும் பொருள்படும். தான் கைதியாகும் உண்மையான காரணத்தை முன்னே அறிய வைத்து வாவிருக்கும் குற்றச்சாட்டின் போக்கிரித்தனத்தை அம்பலமாக்குகிறார்.

கடவுள் திருவை விரும்பித் தம்மையே கையளித்தார் கிறிஸ்து. யூதாசின் சதிமுத்தம் அவரது சக்தியை உறிஞ்சிப் போட்டதுபோலும், அவர் முழுப்பெலவின மனிதனானார். சஞ்சோனின் சடையை ஆசை வேசை டாலிலா வெட்டியது (நீதி. 16. 17—19). போல வல்ல, அதிலும் கேடாகஎன்க. நசரேய அர்ப்பணம் சிதைந்ததால் சஞ்சோன் பெலவினனானான். ஆனால் கிறிஸ்து தனது தேவ சக்தியை இழக்கவே முடியாது. இனிமேல் அதைப் பாடுகளை அனுபவித்துக் காட்டமட்டுமே பாவிப்பார். ஏனெனில், கிறிஸ்து அனுபவித்த மனோவேதனை சரீரவேதனைகளின் ஒரு பகுதியையே எந்த மனிதனும் அறிவோடு அனுபவிக்க முடியாது என்று வேத அறிஞரும், வைத்திய நிபுணரும் கூறுகிறார்கள். நாமோ அவருடைய கொடூர பாடுகளைப் பார்க்க விரும்பாது போலிப் படங்கள், பாசுகளினாலே அவற்றை மாற்றி மறைத்துச் சோடித்து வேடிக்கையாக்கி விடுகின்றோம். உண்மைக்கு ஒவ்வாத கட்டுக் கதைகளைக் கூட்டி உணர்ச்சி கவர்ச்சியைத் தேடுகிறோம்; அவற்றை அறிந்த ஆதிக்கிறீஸ்தவர்கள் விபரம் தேடவில்லை, வரையவில்லை, ஊன்றித் தியானம செய்தார்கள். நற்செய்தி விளக்கமேதும் கொடுக்காது எதிரிகள் அவருக்குச் செய்ததையே குறிப்பிடுகிறது.

"படைவீரரும் ஆயிரர் தலைவனும் யூதகாவலரும் யேசுவைப் பிடித்துக்கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள்" (அரு. 18. 12.) நடந்த சம்பவத்தை வெறுப்போடு குறிப்பிடுகிறார்கள் சீடர்கள். என்ன எப்படி நடந்ததென்பதைச் சந்தர்ப்பங்களினின்று யூகித்துணருமாறு விடுகிறார்கள். ஏதுசெய்வார் என்றபயம் ஒரு புறம் விளங்காத அவர் செயல்களின் அதிசயம் மறுபுறம் கூட்டத்தைத் திகைப்பில மாட்டியது. உத்தரவு கிடைத்த உடனே கிட்ட அணுகப் பயந்து எட்ட நின்று குரைக்கும் நாய்கள் சூடுபட்டுவிழுந்த மரையின் மேலே பாய்ந்த மாதிரி அவரைப் பிடித்தார்கள். செத்த பாம்பை அடிக்கும் சிறுர்கள் அதை விட்டுப் பிரியாது நொட்டிக் கொண்டிருப்பார்கள். அப்படியே சிங்கம் செம்மறியாக மாறியது கண்டதும் கர்ச்சிதம் கொண்டு அவரை வதைக்கத் தொடங்கினார்கள்.

ஒருவரைக் கைதுசெய்யும் போது ரோமான சேவகன் வலப்பாதத்திலே குதிக்காலால் மிதித்து வலக்கையை மணிக்கட்டிற் பிடித்துக் கீழாலே பின்புறமாக எடுத்துத் தோள்களிடையே மடக்குவான். மற்றொருவன் இடக்கையையும் அவ்விதமே மடக்கி நெரிக்கத் தோள் மூட்டுகள் பிசகும், நோவினாலே நாரிவளையும். உடனே கைகளைச் சேர்த்துக் கயிற்றாலே கட்டிவிடுவார்கள். இந்தத் தோள் மூட்டை முறித்த நோவு சாகுமட்டும் கைதியை உறுத்திவாட்டிக் கொண்டிருக்கும். இந்தக் கட்டோடு எந்தக் கைதியும் தவறி ஓடவே முடியாது. எனினும் அவமானத்தின் ஆடம்பரத்துக்காகக் கழுத்திலும் காலிலும் கயிறு போட்டுப் பிடித்து நடத்திக்கொண்டு போவார்கள். அதோடு கிட்ட உள்ளவரெல்லாம் கொட்டமடக்க என்று குட்டலாம் நொட்டலாம் ஆசைதீர அடிக்கலாம், இடிக்கலாம், உதைக்கலாம், தாடியைப் பிடுங்கலாம், முகத்திலே துப்பலாம் எந்த நிந்தையுசெய்து சரசம் பண்ணலாம். கிறிஸ்துவின உடலிலே தோன்றும் கணக்கற்ற காயங்களின் காரணம் தோட்டத்திலேதானே தொடங்கிவிட்டது.

(தொடரும்)

---

### வண. சுவாமி L. J. ஏக்கஸ்ரீனர் அவர்கள்மீது பாடிய
## பிரிவிரங்கற் பாக்கள்

வண்டு தொடும் பூமாலை வேந்தர் தாமும்.
வந்துபணிந் திடுமரசில் வாழ்ந்த வேந்தே!
கண்டவுடன் இனிக்கின்ற செங் கரும்பே!
கலைக்கடலே! எழிலார்ந்த காம்பன் முத்தே!
எண்டிசையும் சான்றோர்கள் நாவில் வாழ்ந்து
இலங்கிய சற் குருமணியே! சொல்லின் செல்வா!
விண்டலத்தோர் புகழ்பாடச் சென்றுவிட்டாய்
வேதனையால் நாமிங்கு துடிக்கின் றோமே.

●

விலை கொடுக்க முடியாத வேத போதம்
வெண்கலத்தின் இசைபொங்கு நாத கீதம்
கலைவடித்துப் பிழிந்திட்ட ஞான தானம்
கர்த்தனருள் பெற்றெமக்குத் தந்த போதும்
அலையறியாக் கடல் போலும் அமைதி கண்டாய்
அடியெடுத்து வைத்தாலும் புல் சாகாதே
மலைசரிந்த வாறுக மண்ணிற் சாய்ந்து
மறைந்தாயே! மறந்தாயோ மக்கள் எம்மை

●

கருணையொடு சாந்தத்தின் ஒளியைத் தேக்கிக்
கனிவருளும் கண்மலரேன் மூடிவிட்டாய்?
அருமலரின் செந்தேனுய் அன்பைச் சிந்தி
அமுதவுரை சொரிந்த இதழ் மலர்ந்திடாதோ?
தருமதுரை தங்கமணிப் பூங்கரங்கள்
தாங்கியெமை அணைக்காவோ என்றேயேங்கி
உருகி மனம் வாடுகிறோம் என்றும் எங்கள்
உள்ளத்திற் பொன்வதனம் ஒளிருமையா

●

வையத்தில் வாழ்வாங்கு வாழ வேண்டும்
வல்லபரன் அடிமலரில் தாழ வேண்டும்
பொய்யென்னும் உடலத்தின் உதிரம் யாவும்
புனிதமுறுஞ் சேவைக்கே பொழிதல் வேண்டும்
மெய்யன்பின் வடிவந்தான் யேசு தேவன்
மீட்பரவர் நாமத்தின் மகிமை காப்போர்
உய்வடைவார் உயர்வடைவார் என்று காட்டி
உத்தமர்கள் செல்வார்கள் இதுதான் உண்மை.

யாழ்-ஜெயம்.

---

● சுதந்திர ஜேர்மன் குடியரசிலுள்ள ஹம்பேர்க்நகரில் ஒரு நூதனமான தொலைபேசி இருக்கிறது. ஒருவர் தனக்கு உடலநலம் குறைந்தால் இந்தத் தொலைபேசியின் 1159ஆம் எண்ணைச் சுழற்றினல் அது விபரங் கேட்டுத் தகுந்த பரிகாரத்தை அறிவித்து விடுகிறது.

● பழங்களிலே மாம்பழம் அதிகசுவை உடையது. அதில் விற்றமின் 'ஏ'சத்து அதிகமுண்டு. கறற்றைவிட அதிக சத்தைக் கொண்டது. அது உடலுக்குப் புதிய சக்தியை அளித்து உற்சாக மூட்டுகிறது. மலச்சிக்கலையும் போக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✠

திருமதி
மரிகிருதா ராசம் இராசையா

## முதலாண்டு மரணநினைவு

மறைவு;
28—4—1971

கருணைம்பர யேசுவே! ஆத்துமாக்களை நேசிக்கிறவரே! தேவரீருடைய திவ்விய இருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலும் பட்ட மரண அவஸ்தையையும் தேவரீருடைய மாசில்லாத திருத்தாயார் அனுபவித்த வியாகுலங்களையும் பார்த்து, உமது திருச்சமுகத்திற்கு, தேவரீர் அழைத்துக்கொள்ளச் சித்தமான மரிகிருதா ராசம் இராசையாவின் ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாற அனுக்கிரகித்தருளும்.

இதைக் கண்ணுறும் விசுவாசிகள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

துயருறும் சகோதரி
கிளாறு செல்லம்
அவவளர்த்த மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல 55 டேவிட் றோட்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: MB/11164.

1. அந்தோனிப்பிள்ளை பெனடிற் அல்லது இராசரத்தினம்.
2. பெண் ஊர்க்கம்மா

இருவரும் 15/9, காமெல் றோட், றெக்கிளமோன்.

— வழக்காளிகள்

எதிராக

1. செபஸ்றி பிராசிசும்
2. மாரியம்மாவும்

இருவரும் 61/2, திருகாமெல் றோட், யாழ்ப்பாணம். (தனித்தும் ஒருமித்தும்)

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 11164-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1972-ம் ஆண்டு வைகாசி மாதம் 4-ந்தேதி வியாழக்கிழமை முற்பகல் 10½மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3,536-ம், 11-10-69 தொடக்கம் 6-3-71 வரைக்கும் ரூபா 2.000-க்கு 12வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீதவட்டியும், கோட்டுச்செலவு 399ரூபா 30சதமும்.

### ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோயில்பற்று, கரையூரில்உள்ள 11 11/48குளி அடங்கிய சிதம்பரநாதன் வளவும், அதுள் அடங்கிய வீடும் மற்றும் யாவும். இதற்கு எல்லை: கிழக்கு — யோசெவ் யோணின் ஆதனம். வடக்கு— மனுவல் அந்தோனிப்பிள்ளையினதும், பிள்ளைகளினதும் ஆதனம். மேற்கு — சுபாக்கீன் அந்தோனிப்பிள்ளையும், பெண் அன்னம்மாவினதும் ஆதனம் தெற்கு — ஒழுங்கை.

சோ. நாசிங்கம், J. P.
நீதிமன்ற
விற்பனை ஆணையாளரும்,
மதிப்பாளரும்.

தொல்புரம்
29-4-72

---

## வடபகுதிப் பொலிஸ் அதிபர்

வடபகுதிப் பொலிஸ்அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் வெளிநாட்டிலபயிற்சிபெறுவதற்குச் செலவிருந்தார். ஆனால் அவரின் இந்த வெளிநாட்டுப் பயணம தற்காலிகமாகப் பின்போடப்பட்டுள்ளது. ஆயினும் வருகிற ஆனிமாத முடிவில பயிற்சிக்கென்று வெளிநாட்டுக்கு அனுப்பப்படவிருக்கும் பொலிஸ்கோஷ்டி ஒன்றுக்கு அவர் தலைமைதாங்கிச் செல்வாரென அறியவருகிறது.

## புதிய தங்கக் கிரீடம்

இரண்டாவது இராசசிங்க அரசரின் தங்கக்கிரீடம் 1960 ஆம் ஆண்டு கண்டி நூதனசாலையிலிருந்து களவுபோய்ப் பலவாறு சிதைக்கப்படலாயிற்று. இந்தக் கிரீடத்திலிருந்து பொலிசாரால் மீட்கப்பட்ட பகுதிகள் கொண்டு அதேமாதிரியான புதியகிரீடம்ஒன்று இப்பொழுது கண்டியிலே செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களின் பார்வைக்கெனச் செய்யப்படும் இந்தக் கிரீடத்திலே உண்மைக் கிரீடத்திலிருந்து எஞ்சிய தங்கத் துண்டுகளையும் சேர்த்துக்கொள்ளப் படுகிறது.

## பிரயாணிகள் படும் கஷ்டம்

குறிகாட்டுவான்-நெடுந்தீவு போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த "இராசேஸ்வரி" எனும் யந்திரப்படகு காரைநகரில் பழுதடைந்து இருப்பதாலும், இதுவரை போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவந்த "அலையரசி" எனும் யந்திரப் படகும் சுக்கான்முறிந்து கடல்நீர் உட்புகுவதாலும் போக்குவரத்துத்தடை ஏற்பட்டுப் பிரயாணிகள் பெரிதும் கஷ்டமடைந்து வருகிறார்கள்.

## புதிய இரகசிய பிரிவு

கள்ளக் கடத்தல்களை உடனடியாகக்கண்டுபிடித்து, கடத்தல் பேர்வழிகளையும் கையும் மெய்யுமாகப் பிடிக்க, கள்ளக் கடத்தல்களுக்கு ஒரு முடிவு காணுமுகமாக யாழ்ப்பாணத்திலே ஓர் இரகசியபிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது. சட்ட விரோதமான கள்ளக் கடத்தல்பிரிவின் கமாண்டரான கேணல் றெட்றிக்கோ இதற்குத் தலைவராவர். கள்ளக் கடத்தல் பொருள்கள் இங்கிருந்து செல்வதாகவோ, அன்றேல் இந்திய கரையிலிருந்து இங்கு வருவதாகவோ தகவல்கள் கிடைத்ததும் உடனடியாக அவற்றைக் கண்டுபிடிக்க இப்புதிய இரகசியப்பிரிவின் தகவல்கள் வழிவகுக்கும்.

## ஆயிரம்பேருக்கு வேலை

யாழ்ப்பாண மாவட்டத்தில் திறக்கப்படவிருக்கும் 208கள்ளுத் தவறணைகளிலும் 1,000 பேருக்கு வேலைகிடைக்கும். தவறணை ஊழியர்களும் தெரிவுசெய்யப் பட்டுவிட்டார்கள். கள்ளுத் தவறணைகளைத் திறப்பதற்கான 208 இடங்களும் தெரிவுசெய்யப் பட்டுவிட்டன. 30கள்உற்பத்தி- விற்பனைச்சங்கங்களிலும்7 000 சீவல்தொழிலாளர் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளார்கள். ஆலயங்கள், பாடசாலைகளுக்குத் தூரத்திலேயே தவறணைகள் அமையவிருக்கின்றன.

# செய்திகள்

## நவீன சந்தை இரண்டாவதுகட்டம்

யாழ்ப்பாணநகர நவீனசந்தையின் முதலாவது கட்ட வேலைகள் முடிவடைந்து விட்டமையால் இரண்டாவது கட்டவேலைகளைச் செய்து முடிக்க அரசாங்கத்திடம் 20 லட்சம் ரூபா கடன் கேட்பதென்று யாழ்ப்பாண மாநகர சபை தீர்மானித்திருக்கிறது.

## புதிய நீதியரசர்கள்

திரு. ரி. டபிள்யு. இராசரத்தினம, திரு. டி. விமலரத்தினம் எனும இருவரும் சுப்பிறீங்கோட்டுப் புதிய நீதியரசர்களாக நியமனஞ் செய்யப்பெற்றிருக்கிறார்கள். 51வயதுடையவரான நீதியரசர் இராசரத்தினம் யாழ்ப்பாணத்திலே பிரபல வழக்கறிஞராயும், கூட்டுறவாளராயும விளங்கியிருந்து காலஞ்சென்ற திரு. ரி. சி. இராசரத்தினத்தின் புதல்வர் 1970ஆம ஆண்டு ஐப்பசி மாதம அசைஸ் கமிஷனாராக நியமனம் பெற்ற இவர் சென்ற 11ஆம திகதி முதல் சுப்பிறீங்கோட்டு நீதியரசராக நியமனம் பெற்றுள்ளனர். மறுநீதியரசரான திரு. டி. விமலசேனனின் வயதும் 51. இவர் கொழும்பு, கண்டி, பாணந்துறை, காலி மாவட்டங்களில் நீதவானாயிருந்து அசைஸ் கமிஷனராக நியமனம் பெற்றிருந்தார்.

## இலவச அரிசி நஷ்டம்

மக்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுவதால வருடம் தோறும் அரசாங்கத்துக்கு 5 கோடியே 80 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுகிறது; உலகச் சந்தையில் அரிசியின் விலை அதிகரித்துவிட்டது; அதனால் அரசாங்கம் ஒவ்வொரு கொத்து அரிசிக்கும் 90சதம் கொடுத்தே வாங்கவேண்டியிருக்கிறது; இவ்விதம் அதிக விலைகொடுத்து வாங்கிய அரிசியை அரசாங்கம் இலவசமாக வழங்குவதாலேயே இந்த நஷ்டம் ஏற்படுகிறது என்று நாரம்மலாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலாச்சார மந்திரி கூறியிருக்கிறார்.

## பனம்பொருள் நிலைய பனங்கட்டி

கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் இப் பருவகாலத்திற்கெனச் சாதாரண முறைப்படி தயாரித்துள்ள சுத்தமான பனங்கட்டி தற்போது அந்த நிலையத்திலும், யாழ்ப்பாண ஐக்கியவியாபாரச் சங்கக் கட்டிடத்திலும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

## 1,500 பேர் விடுதலை

பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய வகுப்புகளுக்குச் சமூகமளித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 1,500பேரை அரசாங்கம் சென்ற வியாழக்கிழமை விடுதலை செய்துள்ளது. இந்த வகுப்புகளில் 4,500 பேர் கலந்துகொண்டதாக விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

## தமிழாராய்ச்சி மகாநாடு

அனைத்துலக நான்காவது தமிழாராய்ச்சி மகாநாடு அடுத்து நிகழும 1973ஆம் ஆண்டு தை மாதம் 3ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை நாலு தினங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும். தமிழாராய்ச்சி மகாநாடு 1966ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும், இரண்டாவது மகாநாடு 68ஆம் ஆண்டு சென்னைமாநகரிலும், மூன்றாவது மகாநாடு 70ஆம ஆண்டு பரீஸ் மாநகரிலும நடைபெற்றுள்ளன. பரீஸ்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபிரகாரம் நான்காவது மகாநாடு யாழ்ப்பாணத்தில் நிகழவிருக்கிறது. இம மகாநாடு சம்பந்தமான முதல் அழைப்பும் அறிவிப்பும் யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிறட் துரையப்பா அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்த அழைப்புடன் மகாநாட்டில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பப் பத்திரமும் இணைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் தங்கமுண்டா

இலங்கையில் தங்கப்படிவங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தத் தங்கம் படிவங்கள் பெல்மதுலைப்பகுதியில் இருப்பதாகவும் அரசாங்க அறிவித்தல் ஒன்று தெரிவிக்கிறது.

## நவீன மீன்பிடி துறைமுகம்

காரைநகர் வடக்கிலுள்ள சாம்பலோடை எனுமிடத்தை வகுத்த கடற்கரையோரத்தில் நவீன மீன்பிடி துறைமுகம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. அத்துடன் இத்துறைமுகத்திற்கு அருகாமையிலுள்ள காணிகளை வாங்கி மீனவர்களைக் குடியேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

## அரிசி இறக்குமதி

மிளகாய், வெங்காயம் முதலாம் உணவுப் பொருட்களின உற்பத்தியில அபிவிருத்தி காண்பதற்காக வெளிநாடுகளிலிருந்து அவற்றின் இறக்குமதிக்குத் தடைவிதிக்கப்பட்டது. அடுத்துநிகழும் 1973-ம் ஆண்டின் இடைப்பகுதியிலே வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்கும் தடைவிதிக்கப்படுமென்று கப்பல்போக்குவரத்து மந்திரி வெள்ளவத்தையில் நடைபெற்ற பரிசளிப்புவிழா ஒன்றில் பேசியிருக்கின்றார்.

## மாவட்ட நூதனசாலைகள்

அரசாங்க அதிடர்களின் மாவட்டம ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் நூதனசாலையை அமைக்கக்கலாச்சார அமைச தீர்மானித்திருக்கிறது. இவற்றிலே அந்தந்த மாவட்டத்திலுள்ள புராதனப் பொருள்கள்சேகரித்துப் பாதுகாக்கப்படும். சரித்திர, சமய, புதைபொருள், கலாசாரம் சம்பந்தப்பட்ட பொருள்கள் அவற்றில்வைத்துக் காப்பாற்றப்படும். ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய புராதனப் பொருள்களை அந்தந்த மாவட்டத்திலேயே சேகரித்துப் பாதுகாப்பதால் அந்தந்தப்பகுதிமக்கள் பயனடைய முடியுமென நம்பப்படுகிறது.

## இருசீனக் கப்பல்கள்

இலங்கையை எதிர்நோக்கியுள்ள அந்நியச் செலாவணிக் கஷ்டங்களைக் கருத்தில் கொண்டு சீன அரசாங்கம இலங்கைக்குக் கடனாக இரு கப்பல்களை வழங்க முன்வந்திருக்கிறது. சீன-இலங்கைக் கப்பல் சேவை சம்பந்தமாகச் செய்யப்பட்டுள்ள முடிவின் பேரிலேயே இருசீனக்கப்பல்களும் இலங்கைக்கு வழங்கப்படும.

* * *

● பிரித்தானியில் தற்பொழுது மூன்று சிறகளைக் கொண்ட நவீனமாதிரியான ஸ்கூட்டர்கள் தயாரிக்கப்படுகின்றன. மணித்தியாலம் முப்பது மைல் வேகத்தில் செல்லும் இந்த கூட்டர்களிலுள்ள பெற்றோல் முடிந்துபோனால் சைக்கிளைப்போன்று இவைகளைச் செலுத்திப்போகலாம். சைக்கிளுக்குப் போன்று இவற்றிலும் 'பெடல்' பொருத்தப்பட்டுள்ளது.

● எதிரேவரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் செனற்றர் எட்வாட் கென்னடி போட்டியிடமாட்டார். ஏனெனில், அவரும் தமது சகோதரர்களைப்போல் கொலை செய்யப்படக்கூடிய அபாயம் அதிகமாயிருப்பதாக 81வயது நிரம்பிய அவருடைய தாயாரான றோஸ் கென்னடி கருதுவதாலேயே இம்முறை அவர்போட்டியிட மாட்டாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

● கையில்லாதவர்கள் தங்கள் மோட்டர் கார்களைத் தாங்களே ஓட்டிச் செல்லக் கூடியதாய் பிரித்தானியிலே கார்கள் அமைக்கப்படுகின்றன. அவர்களின் அவற்றில் ஸ்ரேறிங்சக்கரம் கால்களின் அடியில் வைக்கப்பட்டுள்ளது. அதனால் அதிக பயிற்சியின்றியே இலகுவாக அவர்கள் கார்களை ஓட்டப் பழகிக் கொள்ளலாம்.

---

### நன்றித்துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தினால் நாங்கள் பெற்றுக் கொண்ட சகலநன்மை உபகாரங்களுக்கும் நன்றி.

— ஒரு பக்தன்

K. P. E.
PeraK.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஹூ சித்திரை மாதம் 29-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். டெலிபோன் 300. தாபிதம் 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org